மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Puranatai of Tholkappiyam and Language Deviation

S. Manikandan

Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, India

Manuscript ID :
MT470A0154

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 07.10.2023
Revised: 25.10.2023
Accepted: 06.11.2023
Published: 30.11.2023

Pages : 33-41

DOI:
10.5281/zenodo.10224118

ABSTRACT:

Those features, which function beyond the languages, accepted grammatical norms could be termed as sanctioned deviations from grammatical rules. Those accepted deviations can be considered as normal dynamics of a language. Tholkappiyam describes the grammar of Tamil as more of a descriptive nature rather than of a prescriptive one. Tholkappiyam, which explains the systemic structure of the Tamil language, describes those components, which function beyond the grammar under sanctioned deviations and general permissive rules. This type of detailing is of major importance. Thus, those general permissive rules that function beyond the accepted grammatical norms are also considered as sanctioned deviations.

KEYWORDS:

Puranatai, Deviation, Commentaries, Language Structure, Ozhipiyal, Poruliyal

தொல்காப்பியப் புறனடையும் வழுவமைதியும்

ஸ்ரீ. மணிகண்டன்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மொழியின் ஒழுங்கமைவுகளைக் கடந்தியங்கும் கூறுகளை வழுவமைதியென்று கூறலாம். அவ்வாறான கூறுகளை மொழியமைப்பின் இயல்பான இயங்கியலாகவே கொள்ளமுடியும். தொல்காப்பியம் மொழியின் இயங்கியலை விதிமுறை இலக்கணமாகக் கூறாமல் மொழியின் இயல்பான போக்கிலேயே குறிப்பிடுகின்றது. மொழியின் அமைவொழுங்குகளைக் குறிப்பிடும் தொல்காப்பியம் அவற்றைக் கடந்தியங்கும் கூறுகளை வழுவமைதி, புறனடை போன்ற கருத்தியல்களின்வழி குறிப்பிடுவதும் முக்கியத்துவமுடையதாகின்றது. எனவே அமைவொழுங்குகளைக் கடந்தியங்கும் புறனடைகளும் வழுவமைதியாக் கொள்ளப்படுகின்றன.

கருச்சொற்கள்

புறனடை, வழுவமைதி, உரைகள், மொழியமைப்பு, ஒழிபியல், பொருளியல்

முன்னுரை

மொழியின் இயங்குநிலை என்பது அமைவொழுங்குடையதாகவும் அதைக் கடந்ததாகவும் இருக்கிறது. இந்த அமைவொழுங்குப் பார்வை, அதைக் கடந்தவற்றை வழு என்று கூறுகிறது. சமூக, பண்பாட்டு, சூழலியல் தன்மைகளுக்கேற்ப மாறுபடும் மொழிக்கூறுகளை, மொழியின் அமைவொழுங்கைப் பகுப்பாய்வு வழு என்றும் அதை ஏற்பதை வழுவமைதி என்றும் கூறுகிறது. இவ்வாறு மொழியின் அமைவொழுங்கு விதிகளை மீறி இயங்குவதை வழுவமைதியாகக் காணமுடியும்.

மொழிவிலகலின் வெளியை இலக்கணநூல்களும் உரைகளும் வழுவமைதியாக முன்வைக்கின்றன. தொல்காப்பியம் தொடங்கிப் பிற்கால இலக்கணநூல்கள் குறிப்பிடுகின்ற புறனடைச் சூத்திரங்களும், அதுவரை சொல்லப்பட்ட விதிகளுக்கு மாற்றாக அல்லது காலமாற்றத்தால் மொழியில் உள்ள மொழி அமைப்பு விதிகளிலிருந்து விலகும் கூறுகளாகிய வழுவமைதிகளையும் மொழிக்கூறாகக் காண வேண்டுமென்கின்ற கருத்தியலை முன்வைக்கின்றன. தொல்காப்பியம் இவ்வாறான ஏற்பினை ஒவ்வொரு அதிகாரங்களின் இறுதியிலும் இயல்களின் இறுதியிலும்

சூத்திரங்களுக்கிடையிலும் குறிப்பிடுவதைக் காணலாம். நன்னூலில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே"[1] (நன்னூல், நூற்பா.462) என்று குறிப்பிடப்படுவதிலிருந்து மொழியில் உள்ள விலகல் கூறுகளையும் புதிதாக உருவாகும் இயங்குவெளியை வழுவென்று ஒதுக்கிவிடாமல் அவற்றையும் மொழிக்கூறாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கின்ற கருத்து முன்வைக்கப்படுவதை அறியலாம். அந்த அடிப்படையில் மொழியின் ஒலிநிலை, எழுத்துநிலை, சொல்நிலை, பொருள்நிலை ஆகிய அனைத்துக் கூறுகளிலும் இந்த ஏற்பானது நிகழும். இவ்வாறான ஏற்பையே வழுவமைதியெனக் கருதலாம். எனவே இலக்கணங்கள் முன்வைக்கின்ற மொழியின் அமைவொழுங்கு வரம்புமுறைக்குட்படாத அல்லது விதிமுறைகளுக்குட்படாத அல்லது சொல்லப்பட்ட விதிகளுக்கு மாற்றாக உருவாகும் மொழியின் தளர்வுகள்/நெகிழ்வுகளான புறனடைகள் காரண காரிய உறவு அல்லது பண்பாட்டு ஏற்பினைப் பெறும்போது புறனடைகளும் வழுவமைதியாகவே கொள்ளப்படும் என்பதை நிறுவுவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

புறனடையும் வழுவமைதியும்

இலக்கணங்கள் மொழியமைப்பின் அமைவொழுங்கு விதிகளாக வரையறுத்த மொழிக்கூறுகளின் இயங்குநிலைக்கு மறுதலையாகவோ அல்லது விதிவிலக்காகவோ வரும் கூறுகளைப் புறனடை எனலாம். "ஒழுக்கம் திரிதலையும் நடை அல்லது நெறி பிறழ்தலையும் 'விதி மீறல்' எனக் கூறுவதை இங்கு குறிப்பிடலாம். ஆகவே புறனடை என்பதற்கு வெளியில் சொல்லப்படுகின்ற விதி, அதாவது ஒரு பொருண்மை குறித்த விதிகளின் தொகுதிக்கு வெளியே சொல்லப்படுகின்ற விதி எனக் கொள்ளலாம்"[2] (ஞா.குருசாமி, 2023: ப.17). மேலும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி புறனடைச் சூத்திரமென்பதற்கு "விதித்தவற்றுள் அடங்காதனவற்றை அமைத்துக்காட்டும் பொதுச்சூத்திரம்"[3] (ப:2811) என்று குறிப்பிடுவதிலிருந்து மொழியின் விதிகளுக்கு வெளியேயுள்ள அல்லது விதிகளுக்குக் கட்டுப்படாத இயங்கியலைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மொழியின் அமைவொழுங்கு இலக்கண விதிகளுக்குள் அடங்காத இவ்வியங்கியலையே இலக்கணங்களும் உரைகளும் வழுவமைதியென்று குறிப்பிடுகின்றன. வழாநிலை விதிகளாகக் கட்டமைக்கப்பட்டால் வழுவமைதியானது அவ்விதிகளின் விலக்குகளாக அமைகின்றன. எனவே விதிவிலக்கு எனும் நிலையில் புறனடையையும் வழுவமைதியையும் கொண்டால் புறனடையும் வழுவமைதியாகவே கொள்ளப்படும் என்பதை, "வழாநிலையை விதிகள் என்றும் வழுவமைதியை விதிவிலக்கு என்றோ புறனடை என்றோ கொள்ளலாம்"[4] (ஞா. குருசாமி, 2023: ப. 24) என்றும் "விதிக்கு முரண்பாடாக வந்த சான்றை அதிகாரப் புறனடையாகக் கொள்ளுமாறு மாட்டேற்றுகிறார் அவர் என்னும் ரா. செயராமன் கருத்தின் வழியாக வழுவமைதியாக

இருக்கும் விதிவிலக்கு நூற்பாக்களே புறனடை நூற்பாக்கள் என்ற முடிவிற்கு வரமுடிகிறது"[5] என்றும் (மேலது, ப.24 - 25) குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

இவற்றைப் போலவே திணைமயக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் "முத்திறப் பொருளுந் தத்தந் திணையொடு மரபின் வாராது மயங்கலு முரிய"[6] (அகப்பொருள் விளக்கம், நூற்பா.251) என்னும் அகப்பொருள் விளக்கச் சூத்திரத்திற்கு "ஐந்திணைக்கும் உரிய பொருளின் வழுவமைதி உணர்த்துதல் நுதலிற்று"[7] (அகப்பொருள் விளக்கம், 1977: ப.416) எனவும் இதே சூத்திரத்திற்கு "முதற்பொருள் முதலிய மூன்றற்கும் ஆவது ஒரு புறனடை கூறுகின்றது"[8] (இலக்கண விளக்கம், 1972: ப.166) என்று இலக்கண விளக்கவுரையும் அமைவதிலிருந்து வழுவமைதியும் புறனடையும் அமைப்பொழுங்கு முறைகளைக்கடந்த இயங்குவெளியையுடையதாக அறிந்துகொள்ள முடியும்.

தொல்காப்பியப் புறனடையும் உரைகளின் புறனடையும்

தொல்காப்பியம் மொழியின் இயங்குதளத்தை அதன் போக்கில் பகுப்பாய்வு செய்து விளக்கும் பனுவலாக அமைகிறது. அந்தவகையில், மொழியானது ஒழுங்கமைவுக்கூறுகளும் அவற்றைக் கடந்து இயங்கும் சூழல்களுமாக குறிப்புநிலையில் இயங்குவதைத் தொடர்ந்து வலியுறுத்தும் போக்கிலேயே பொருண்மைப் பகுப்பு விளக்கங்கள் அமைகின்றன. இந்த நோக்கிலேயே சூத்திரங்களின், இயல்களின், அதிகாரங்களின் அமைப்புமுறைகள் உள்ளன. வேற்றுமை மயங்கியல், எச்சவியல், உரியியல், பொருளியல், மரபியல் போன்ற இயல்களும்; ஒவ்வொரு பொருண்மை குறித்த விளக்கச் சூத்திரங்கள் முடிந்து புறனடைச் சூத்திரங்கள் அமையும் முறைகளும் இதனைத் துலக்கமாக எடுத்துரைக்கின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே உரையாசிரியர்களும் புறனடையாகப் பலவற்றைக் கூறுகின்றனர்.

மொழியமைப்பின் அமைவொழுங்கு விதிமுறைகளுக்குட்படாத மொழியமைப்புகளையும் இலக்கண வரையறைக்குட்படுத்தும்போது அவை புறனடைகளாகக் கொள்ளப்படுகின்றன என்பதை இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பாலசுந்தரனார் போன்றோரின் உரைகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். தொல்காப்பியம், சூத்திரங்களுக்கிடையிலும் இயல்கள் மற்றும் அதிகாரங்களின் இறுதியிலும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள புறனடைச் செய்திகளை அறிந்துகொள்ள முடிகின்றது. அந்த வகையில் எழுத்ததிகாரத்தில் எழுத்துகள் ஒலிக்கும் மாத்திரையளவைக் குறிப்பிட குறிலுக்கு அளவு ஒன்று, நெடிலுக்கு இரண்டு என விதிகூறிய அடுத்த சூத்திரமாக "மூவள பிசைத்தல் ஓரள பின்றே"[9] (தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.5) என்று குறிப்பிடுவதிலிருந்து மூன்று மாத்திரையளவு ஒலிக்கக்கூடிய எழுத்துகள் இல்லையென்பதை அறிந்துகொள்ளலாம். இச்சூத்திரமானது "மாத்திரை பற்றி எழுத்துகட்குப் புறனடை கூறுகின்றது"[10] (பாலசுந்தரனார், 2012: ப.87)

என்று பாலசுந்தரனார் குறிப்பிடுகிறார். இரண்டு மாத்திரையளவிற்கு மேல் ஒலிக்கக்கூடிய முறையை, "நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்"[11] (தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.6) எனும் சூத்திரத்தில் அமைத்து அளபெடையாகக் கொள்ளப்படும். இவ்வாறு எழுத்துகள் நீண்டு ஒலிக்கும் முறை வழுவமைதியாக அமைத்துக்கொள்ளப்படுவதை, "அளபிறந் திசைத்தலும் ஒற்றிசை நீடலும்..."[12] (மேலது, நூற்பா.33) எனும் நூன்மரபிற்கான இயல் புறனடையாகத் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சூத்திரத்தைப் புறனடையாகக் குறிப்பிடும் பாலசுந்தரனார், "அதனான் மாத்திரையளவுதற் பொருட்டும் இன்னோசையின் பொருட்டும் இயற்றமிழ்ச் செய்யுளுள் எழுத்துகள் நீண்டு இசைப்பின் இவ்விலக்கணத்தான் அமைத்துக்கொள்க"[13] (பாலசுந்தரனார், 2012: ப.87) என்று குறிப்பிட்டு செய்யுளில் அளபெடைகளுக்கு வழுவமைதி கூறியுள்ளார். இவ்வாறான அளபெடைகளை யாப்பின் இசைத்தன்மைக்கு ஏற்ப அசையாகக் கொண்டும் கொள்ளாமலும் அமைக்கப்படும் என்பதை, "அளபெடை அசைநிலை யாகலும் உரித்தே"[14] (தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.318) என்று குறிப்பிடுவதிலிருந்து அறியலாம். இவ்வாறு அளபெடைகள் செய்யுளின் கவித்துவத்துக்கேற்ப நெகிழ்வுத்தன்மையுடையனவாக அமைந்துள்ளன. இந்நெகிழ்வுகள் அசைநிலைகள் மாறாத பண்புடையனவாக இன்றி வழுப்பண்புடையனவாக இருந்தாலும் அப்பண்பு செய்யுளின் இசைப்பண்பின் ஏற்பில் வழுவமைதிகளாகக் கருதலாம்.

இளம்பூரணர் மற்றும் பாலசுந்தரனாரால் மெய்ம்மயக்கத்திற்கான புறனடையாக, "தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்தும் மெய்ந்நிலை மயக்க மான மில்லை"[15] (மேலது, நூற்பா.47) எனும் சூத்திரம் குறிப்பிடப்படுகின்றது. தொல்காப்பியர் உயிர்மெய்க்கண் நிற்கும் மொய்யொலிகளின் மயக்கத்தை நூன்மரபில் ஏற்கனவே கூறியபின் மொழி மரபில் இச்சூத்திரத்தை அமைத்துள்ளார். "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"[16] (மேலது, நூற்பா.46) எனும் விதி அமைத்திருப்பதால் அம்மெய்கள் அகரமொடு பொருந்தி தம்மை உணர்த்த வரும்போது அம்மரபில் திரிந்து வந்தாலும் இழுக்காகாதென ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று புறனடை அமைத்துள்ளார். மேலும், தனிமெய்கள் மொழிநிலைமை பெறுதல்வேண்டி இச்சூத்திரத்தை மெய்ம்மயக்கம் பற்றிக் குறிப்பிடும் நூன்மரபின்கண் வைக்காமல் மொழிமரபில் வைக்கக் காரணமாக "இது வழுவமைதி நோக்கி மொழிமரபின்கண்ண தாயிற்று"[17] (இளம்பூரணர், 2018: ப.115) என்று இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

லகர ஈற்றுப் புணர்ச்சியில் பூல், வேல், ஆல் எனும் முப்பெயரும் அம் சாரியை பெற்று பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங்கோடு என்று புணருமென்கிறார் தொல்காப்பியர். ஆனால் ஆம் சாரியை பெற்றுப் புணர்ந்தாலும் வழுவமைதியாகக் கொள்ளலாம் என்பதை, "பூலாங்கோடு, பூலாங்கழி என ஆம்சாரியையும் வருமென்பார்

உரையாளர். அஃது வழூஉவழக்காகலின் ஏலாது. சான்றோர் வழக்காயின் வழுவமைதியாகப் புறனடைப் பாற்படுத்துக"[18] (பாலசுந்தரனார், 2012:ப.269) என்று பாலசுந்தரனார் குறிப்பிடுவதிலிருந்து வழூஉ வழக்கும் காரண காரிய உறவினடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படும் போது வழுவமைதியாகக் கொள்ளப்பட்டு புறனடையாக்கப்படுமென்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

"இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்..."[19] (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா.197) எனும் சூத்திரம் செய்யுளுள் கூறப்பெறும் விரவுப்பெயரான இயற்பெயர்கள் இறைச்சிப்பொருளை வெளிப்படுத்தும்போது திணையுணர்த்துவதற்குத் துணையாக அவ்வந்நிலத்துப் பொருள்மேல் தோன்றி வருதலான் அவை அஃறிணையைச் சுட்டுமேயன்றி உயர்திணையைச் சுட்டாது என்கின்றது. இச்சூத்திரத்தைப் புறனடைச் சூத்திரமாகக் குறிப்பிட்டுள்ள பாலசுந்தரனார், "கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி"[20] (பாலசுந்தரனார், 2012: ப.170) என்பதில் கடுவன், முதுமகன், மூலன் என்பவை உயர்திணைப் பண்புகளை ஏற்றிக்கூறி இறைச்சிப் பொருள் பெறப்பட வைத்துள்ளமையால் இவை பொதுப்பெயர்களாயினும் அஃறிணையையே சுட்டி நிற்குமென்கின்றார். விரவுப்பெயராவது உயர்திணை, அஃறிணை என்னும் இரண்டு திணைச்சொல்லாவதற்கும் ஒத்த உரிமையுடைனவாய் வருவதாகும். ஒரு பெயர் உயர்திணையில் வழங்கப்படும் போது உயர்திணையாகவும் அதே பெயர் அஃறிணையில் வழங்கப்படும் போது அஃறிணையாகவும் இருக்கும் தன்மையை விரவாநிலை அதாவது திணை மயங்கா வழாநிலை எனக்கூறலாம். அவ்வாறில்லாமல் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகி இருதிணையிலும் வழங்கப்படும் பெயர்கள் விரவுப்பெயர்களாகும். இதனைத் தொல்காப்பியர், "பெயரெனப் படுபவை தெரியுங் காலை......"[21] (தொல்காப்பியம் சொல்லதிகாரம், நூற்பா.161), "இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையின்....."[22] (மேலது, நூற்பா.173) என்று கூறியுள்ளார். இதில் வினைக்குப் பொதுவாக அமையும் பால் தெரிபு இல்லாமல் அமையும். எனவே "உயர்திணை, அஃறிணை இரண்டிற்கும் பொதுவாய் விரவிவருவதாக அமைகிறது. உதாரணமாக, யானை வந்தது (அஃறிணை) - யானை வந்தான் (உயர்திணை), சாத்தி சாந்தரைக்கும் (உயர்திணை) - சாத்தன்/சாத்தி புற்றின்னும் (அஃறிணை) என்று சேனாவரையர் திணைவிரவுக்குச் சான்று காட்டுகிறார்"[23] (சி.கணேசையர், 2007: பக்.212-214). இவ்வாறு "தங்கம் என்ற சொல்லோடு வந்தான், வந்தாள், வந்தது என்னும் வினைகளை இணைக்கும் போது தங்கம் வந்தான், தங்கம் வந்தாள், தங்கம் வந்தது என்று இணைந்து விரவுப்பெயராக வரும்"[24] (ரா. செயராமன், 2013: ப.38) என ர. செயராமன் எனக் குறிப்பிடுகிறார். இங்கு விரவுப்பெயர் இருதிணைக்கும் பொதுவாய் வரும் பண்பில் வழுவமைதியாகிறது. அதாவது சாத்தி புல்திண்ணும் என்பதில் சாத்தி என்பது

உயர்திணைக்குரிய பெயர் அஃறிணைக்கு விரவி வந்துள்ளது. இதைப்போலவே அஃறிணைப் பெயர்கள் உயர்திணைக்கு விரவி வருவதையும் (எருமை வந்தான், சிங்கம் வந்தது - உயர்திணை) வழக்கில் காணமுடிகிறது. எனவே இவ்விரவுப்பெயர் பண்பு மொழியில் ஏற்புடையதாக இருப்பதால் வழுவமைதி என்று தொல்காப்பியத்தின் வழியும் உரையாசிரியர் வழியும் கூறமுடியும்.

வினையியலில் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை திரிபுடனும் அமையும் என்பதை, "அவற்றுள் பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி எண்ணியல் மருங்கின் திரிபவை யுளவே"[25] (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா.210) எனும் சூத்திரத்தில் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இச்சூத்திரத்தை, "உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினை பற்றியதொரு புறனடை கூறுகின்றது. தன்மைப்பன்மை வினை பற்றிய வழுவமைதி எனலுமாம்"[26] (பாலசுந்தரனார்: 2012: ப.182) என்று பாலசுந்தரனார் குறிப்பிடுகின்றார். அதாவது பன்மைத்தன்மை உணர்த்தும் வினைச்சொற்கள் தன்னொடு பிற பொருளை உளப்படுத்தும்போது திரிவனவுமுள்ளன. தன்மைவினையானது உயர்திணைக்கே உரியதென்பதால் உயர்திணையையே உளப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாமல் சிறுபான்மை அஃறிணையை உளப்படுத்தி வந்தாலும் அத்திரிபானது வழுவாகாது. எனவே "இவ்வுளப்படுத்தற்குத் திரியும் திரிபு வழுத்திரிபு அன்று"[27] (தி.வே.கோபாலையர் 2013: ப.31) என்று இளம்பூரணரும் "அஃறிணையை உளப்படுத்துதல் வழுவாயினும் அமைக என்றார்"[28] (மேலது, ப.118) என்று சேனாவரையரும் குறிப்பிடுகின்றனர். இச்சூத்திரத்திற்கான குறிப்புரையில் "உயர்திணை வினைமுற்றின் வழுவமைதியாதலின் வினைமுற்றின் புறனடை நூற்பாவை அடுத்து இந்நூற்பா அமைந்துள்ளது"[29] (மேலது, ப.162) என்று கோபாலையர் குறிப்பிடுகின்றார். எனவே இளம்பூரணர், சேனாவரையர், கோபாலையர் ஆகியோரால் வழுவமைதியுமாகக் கொள்ளப்பட்ட இச்சூத்திரம் பாலசுந்தரனாரால் புறனடையும் வழுவமைதியுமாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொல்காப்பியரால் மூன்று அதிகாரங்களிலும் புறனடைச் சூத்திரங்கள் குறிப்பிட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு அதிகாரத்திலும் பிற இயல்களில் குறிப்பிடாத விதிகளைத் தனி இயலாக அமைக்கும் போக்கு தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது. அவ்வமைப்பைப் புறனடையாகக் கொள்கிறார் ஞா. குருசாமி. எழுத்ததிகாரத்தின் தொகைமரபு, சொல்லதிகாரத்தின் எச்சவியல், பொருளதிகாரத்தின் பொருளியல் ஆகிய இயல்கள் அவ்வவ்வதிகாரங்களின் புறனடையாக அமைக்கப்பட்டுள்ளன என்பதை, "பொதுநூற்பாக்களில் கூறமுடியாத இலக்கண நுவல்பொருள்களை இலக்கணிகள் புறனடை நூற்பாக்களில் கூறியதைப் போல இயல்களில் கூறமுடியாத பொதுமையான நுவல்பொருள்களைத் தனி இயல் அமைத்தும் கூறியுள்ளதைக் காணமுடிகின்றது. அவ்வாறான இயல்கள் தொகைமரபு, எச்சவியல், எச்சமரபு, பொதுவியல், ஒழிபியல்,

சொற்பொதுவியல், பொருளியல், பொது அணியியல் என்னும் பெயர்களில் அமைந்துள்ளன. பெரும்பாலான இலக்கன நூல்களில் அமைந்துள்ள இவ்வகையிலான இயல்கள் புறனடைத் தன்மையில் அமைந்திருப்பதாக"[30] (ஞா. குருசாமி, 2023: பக்.124-125) ஞா. குருசாமி குறிப்பிடுகிறார். இங்கு தொல்காப்பியப் பொருளதிகாரப் பொருளியலை ஒழிபியல் எனவும் நச்சினார்க்கினியர் வழுவமைதிக்கூறுகளை உடையது எனவும் குறிப்பிடுவதிலிருந்து புறனடைகளை வழுவமைதியாகக் கருத இயலும்.

முடிவுரை

இலக்கணப் பகுப்பாய்வுக்குட்பட்ட விதிகள் மொழியின் இயங்குநிலையில் இருப்பது இயல்பாக அமைகின்றபோது விதிவிலக்குகளும் இயல்பான ஒன்றாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறான விதிவிலக்குகள் வழுவாக இருந்தாலும் மொழியியங்கியல், சூழலியல், பண்பாட்டியல் அடிப்படையில் காரண காரிய உறவால் ஏற்றுக்கொள்ளப்படும்போது வழுவமைதியாக்கப்படுகின்றன. தொல்காப்பியமும் புறனடைச் சூத்திரங்கள் வாயிலாக மொழியில் சொல்லப்பட்ட விதிகளுக்கு மாறுதலாக வரும் கூறுகளை காரண காரிய உறவினடிப்படையில் ஏற்றுக்கொள்ளும் மரபை முன்வைக்கின்றது. அம்மரபிலிருந்து தொல்காப்பியம் குறிப்பிடும் புறனடைச் சூத்திரங்களை அவற்றின் பொருண்மை நோக்கிலிருந்தும் உரையாசிரியர்களின் பார்வையிலியிருந்தும் வழுவமைதியெனக் கூறமுடியும்.

சான்றெண் விளக்கம்

1. நன்னூல், நூற்பா.462
2. ஞா.குருசாமி, தமிழ் இலக்கனப் புறனடைகள், 2023, ப.17
3. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, ப:2811, https://www.tamilsurangam.in/tamil_dictionary/chennai_univercity_tamil_lexicon_dictionary/chennai_univercity_tamil_lexicon_dictionary_2811.html
4. ஞா. குருசாமி, தமிழ் இலக்கணப் புறனடைகள், 2023, ப. 24
5. மேலது, பக்.24 - 25
6. அகப்பொருள் விளக்கம், நூற்பா.251
7. வெ. பழனியப்பன், அகப்பொருள் விளக்கம், 1977, ப.416
8. தி.வே. கோபாலையர், இலக்கண விளக்கம், 1972, ப.166
9. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.5
10. பாலசுந்தரனார், 2012, ப.87
11. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.6
12. மேலது, நூற்பா.33
13. பாலசுந்தரனார், 2012, ப.87
14. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூற்பா.318
15. மேலது, நூற்பா.47

16. மேலது, நூற்பா.46
17. இளம்பூரணர், 2018, ப.115
18. பாலசுந்தரனார், 2012, ப.269
19. தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா.197
20. பாலசுந்தரனார், 2012, ப.170
21. தொல்காப்பியம் சொல்லதிகாரம், நூற்பா.161
22. மேலது, நூற்பா.173
23. சி.கணேசையர், 2007, பக்.212-214
24. ரா. செயராமன், 2013, ப.38
25. தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா.210
26. பாலசுந்தரனார்: 2012, ப.182
27. தி.வே.கோபாலையர் 2013, ப.31
28. மேலது, ப.118
29. மேலது, ப.162
30. ஞா. குருசாமி, தமிழ் இலக்கணப் புறனடைகள் 2023, பக்.124-125

துணைநூற்பட்டியல்

1. இரா, இளங்குமரனார், கல்பனா சேக்கிழார், பதிப்பாசிரியர்கள். *தொல்காப்பியம் உரைத்தொகை எழுத்ததிகாரம்*. சென்னை, தமிழ்மண் பதிப்பகம், 2018.
2. சி, கணேசையர், பதிப்பாசிரியர். *தொல்காப்பியம் சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்*. சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2007.
3. ஞா, குருசாமி. *தமிழ் இலக்கணப் புறனடைகள்*. சென்னை, மலர் புக்ஸ், 2023.
4. திவே, கோபாலையர், பதிப்பாசிரியர். *இலக்கண விளக்கம் பொருளதிகாரம் - அகத்திணையியல் முற்பகுதி*. தஞ்சாவூர், சரசுவதி மகால் நூல் நிலையம், 1972.
5. திவே, கோபாலையர், பதிப்பாசிரியர். *தொல்காப்பியம்-சொல்லதிகாரம் உரைக்கொத்து (பெயரியல், வினையியல்)*. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், 2013.
6. ரா, செயராமன். *இயைபும் மயக்கமும்*. சென்னை, தமிழாய்வு மன்றம், 2013.
7. வெ, பழனியப்பன், பதிப்பாசிரியர். *அகப்பொருள் விளக்கம்*. சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1977.
8. பெ, மாதையன், பதிப்பாசிரியர். *தொல்காப்பியம்-சொல்லதிகாரம் பாவலர் பாசுந்தரனார் ஆராய்ச்சிக் காண்டிகையுரை*. சேலம், பெரியார் பல்கலைக்கழகம், 2012.
9. பெ, மாதையன், பதிப்பாசிரியர். *தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் பாவலர் பாசுந்தரனார் ஆராய்ச்சிக் காண்டிகையுரை*. சேலம், பெரியார் பல்கலைக்கழகம், 2012.
10. வாசுதேவமுதலியார், பதிப்பாசிரியர். *நன்னூற்காண்டிகையுரை*. சென்னை, அமெரிக்கன் அச்சுக்கூடம், 1891.

REFERENCES

1. R, Ilankumaranar, Kalpana Sekkizhar, Editors. *Tholkappiyam Urai Thogai Ezhuthathikaram*. Chennai, Tamilman Publications, 2018.
2. C, Ganesha Iyer, Editor. *Tholkappiyam Sollathigaram Moolamum Senavaraiyar Uraiyum*. Chennai, International Institute of Tamil Studies, 2007.
3. G, Gurusamy. *Thamizh Ilakkana Puranadaigal*. Chennai, Malar Books, 2023.
4. TV, Kopalayyar, Editor. *Ilakana Vilakkam Poorul Athigaram* - Akathinaiyil Murpakuthi. Thanjavur, Saraswathi Mahal Library, 1972.
5. TV, Kopalayyar, Editor. *Tholkappiyam - Sollathigaram Urai Kothu (Peyariyal, Vinaiyiyal)*. Thanjavur, Saraswathi Tamil University, 2013.
6. R, Jeyaraman. *Iyaipum Mayakkamum*. Chennai, Tamil Research Council, 2013.
7. V, Palaniappan, Editor. *Akapporul Vilakkam*. Chidambaram, Annamalai University, 1977.
8. P, Madhaiyan, Editor. *Tholkappiyam - Sollathigaram Bhavalar Basundharana Balasundharanar Aaraychi Kantikaiyurai*. Salem, Periyar University, 2012.
9. P, Madhaiyan, Editor. *Tholkappiyam - Ezhuthathikaram Bhavalar Basundharana Balasundharanar Aaraychi Kantikaiyurai*. Salem, Periyar University, 2012.
10. Vasudeva Mudaliar, Editor. *Nannool Kaandikaiyurai*. Chennai, American Printing House, 1891.